JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAFresh summon to Accused. Call on 02.09.2023L

MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 58 /2020 |
| | : | Prosecution P.W - 2 |
| NAME | : | சண்முகையா |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 11.04.2023.

**முதல் விசாரணை**

**நான் காவல் துறையில் பணியாற்றி சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்த போது ஓய்வு பெற்று தற்போது ஏந்தலூரில் குடியிருந்து வருகிறேன். நான் பாவூர்சத்திரம் காவல்நிலையத்தில் கடந்த 28.04.2013 ம் தேதி 16.00 மணிக்கு நான் நிலை யபொறுப்பில் இருந்த போது சேர்ந்தமரம் பாலாஜி நகரைசேர்ந்த சங்கரன்பாண்டியன் மகன் சந்திரசேகர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை கொடுத்தார். அந்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப பாவூர்சத்திரம் காவல் நிலைய குற்ற எண் 149/2013 இதச பிரிவுகள் 420, 506(1) கீழ் வழக்கு பதிவு செய்தேன். அசல் முதல் தகவல் அறிக்கையையும் , அசல் புகாரையும்இணைத்து கனம் தென்காசி குற்றவியல் நீதிமன்ற,த்திற்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட**

உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், விசாரணை நகலை பாவூர்சத்திரம் காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 4 ஆக குறியிடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

## <u>எதிரிகள் தரப்பில் குவி</u>

முதல் தகவல் அறிக்கை காலம் எண் 8 ல் வாதியால் என்ன காரணத்தினால் தாமதம் என்று குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் எண் 15 ல் நீதிமன்றத்தில் அனுப்பப்பட்ட நாளும் நேரமும் என்ற இடத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லைஎன்றால் சரிதான். புகார் மனுவில் இரண்டாவது பக்கத்தில் KVB வங்கி காசோலை எண் 207413, 207412 என்று இடை செருகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு இடைசெருகலாக எழுதப்பட்டுள்ளது அருகில் புகார்தாரரின் கையொப்பம் அல்லது சுறுக்கொப்பம் பெறபடவில்லை என்றால் சரிதான், அந்த எழுதப்பட்டுள்ளது புகார்தாரரின் கையெழுத்து தான். மேற்படி எழுதப்பட்டுள்ள விபரம் புகார் தாரரின் கையெழுத்து என்று வழக்கிற்காக பொய்யா கசொல்லுகிறேன் என்றால் சரியல்ல.புகார் மனுவில் புகார்தாரர் எந்த தேதியில் புகார் கொடுத்தார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் கடைசியில் எதிரிகளிடம்இருந்து ரூ1,20,000/- பணத்தை மீட்டு தரவேண்டும் குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான், தக்க நடவடிக்கை எடுத்து பணத்தை மீட்டு தரவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த புகாரில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளுக்கும் எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. நான் எதிரிகளுக்கு எ Fresh summon to Accused. Call on 02.09.2023 திராக இந்த புகார் மனுவை காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்தேன்என்றால்சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் புகார் மனுவை புகார்தாரரிடம்இருந்து பெறவில்லைஎன்றாலும் நான் சொன்னது போல் பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

//Sd// - சண்முகையா

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi